Visit QB365-SLMS - https://www.qb365.in/slms/ Complete Questions and Answers

Answers Key:

அனைத்து வினாக்களுக்கும் விடையளி

1. தென்னிந்தியாவில் புதிய கற்காலம்:
பரவியுள்ள இடங்கள்:
1. ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம்,தமிழ்நாட்டின் வேடமேற்குப்பகுதிகளில் புதிய கற்கால பண்பாடு நிலவியதாக கண்டறியப்படுகிறது.
2. கோதாவரி, கிருஸ்ணா, பொண்ணாறு, துங்கபத்திரை, காவிரி சமவெளிகளிலும், கர்நாடகாவில் உள்ள சங்கனகல்லு, தெக்கலகோடா, பிரம்மகிரி, மஸ்கி, பிக்லிகல், வட்கல், ஹெமிங்கே, கல்லூர் ஆகிய இடங்களில் புதிய கற்காலப் பண்பாடு நிலவியுள்ளது.
முக்கிய கூறுகள்:
1. சில தொடக்ககாலப் புதிய கற்கால ஆய்விடங்கள் சாம்பல் மேடுகளைக் கொண்டுள்ளன.
2. புதிய கற்கால வளாகத்தின் ஒரு பகுதியாக 200 க்கும் மேற்பட்ட இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.
3. அந்திரப்பிரதேசத்தில் உள்ள உட்னூர், பல்வோய், கர்நாடகத்தில் உள்ள கொடெக்கல், குப்கல், படிகல் ஆகியவை இத்தகைய சாம்பல் மேடுகளைக் கொண்டுள்ளன.
4. மெல்லிய சாம்பலும், நுண்ணுயிர்களால் சிதைக்கப்பட்ட மாட்டுச்சாண அடுக்குகளும் இப்பகுதிகளில் காணப்படுகின்றன.
5. சாம்பல் மேட்டைச் சுற்றிலும் வீடுகளும், புதைகுழிகளும் மனித வாழிடங்களுக்கான சான்றுகளாக உள்ளன.

அனைத்து வினாக்களுக்கும் விடையளி

2. பழங்கற்கால மக்களின் தொடக்ககால பண்பாடு அவர்கள் பயன்படுத்திய கற்கருவிகளின் அடிப்படையில்
1. அச்சூலியன் மரபு 2. சோகனியன் மரபு என இரு மரபுகளாக பிரிக்கப்படுகின்றது.
அச்சூலியன் மரபு :
1. காய் கோடரி வகைக் கருவிகளைக் கொண்ட மரபு அச்சூலியன் மரபு.
2. தொடக்ககால, இடைக்கால, பிற்கால அச்சூலியன் என மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
3. பன்முகம் கொண்ட கோளவடிவம் கொண்ட பொருள்கள் கோடரி, வெட்டுக்கத்திகள், செதுக்கும் கருவிகள் ஆகியவை தொடக்க கால அச்சூலியன் மரபில் அடங்கும்.
சோகனியன் மரபு:
1. இன்றைய கூழாங்கல்லை செதுக்கி உருவாக்கப்படும் கருவிகளை கொண்ட சோகனியன் மரபு.
2. சோகனியன் மரபு துண்டாக்கும் கருவிகளையும் அதைச்சார்ந்த வேலைகளுக்கான கருவிகளையும் மட்டுமே கொண்டது.
3. இன்றைய பாகிஸ்தானில் உள்ள சோகன் ஆற்றின் வடி நீர்ப் பகுதியில் நிலவிய மரபு என்பதால் இது சோகனியன் மரபு எனப்படுகிறது.
3. 1. இந்தியாவில் இடைக்கற்கால நாகரீகம் நிலவிய இடங்கள் இந்தியாவின் பெரும் பகுதிகளில் காணப்படுகின்றன.
2. கடற்கரைப்பகுதி, மணற்பாங்கான இடம், வடிநீர் பகுதி, வனப்பகுதி ஏரிப்பகுதி, பாறை மறைவிடம், மலை மற்றும் மலை சார்ந்த பகுதி, கழிமுகப்பகுதி, என அனைத்து திணை சார் பகுதிகளிலும் இந்நாகரீகம் பரவியிருந்தது.
3. பீகாரில் பயிஸ்ரா, குஜராத்தில் லங்னஜ்,
4. உத்திரப்பிரதேசத்தில் பாகர் 2, சோபனி மண்டோ, சாராய் நகர் ராஜ் மகாதகா, தம் தமா
5. ஆந்திரத்தில் சன கன கல்லு, விசாகப்பட்டினம், கர்நாடகத்தில் கிப்பன ஹள்ளி ஆகிய இடங்கள் இடைக்கற்கால நாகரிகம் நிலவிய இடங்களாகும்.
6. ராஜஸ்தானில் உள்ள பாகோர், தில்வாரா, மும்பையின் கடற்கரைப்பகுதிகள்.
7. தமிழ்நாட்டில் தூத்துக்குடி மாவட்டம் கிழக்குப்பகுதி தேரிக்குன்றுகள் (செம்மறைக்குன்றுகள்) பகுதிகளும் இடைக்கற்கால நாகரீகம் நிலவிய இடங்களாகும்.
4. சிந்து நாகரிகமும் அதன் சமகால பண்பாடுகளும் இந்தியாவிலும் பாகிஸ்தானிலுமாக 1.5 மில்லியன் ச.கிலோ மீட்டர் பரப்பளவில் உள்ளன.
எல்லைகள்:
1. மேற்கில் பாகிஸ்தான் ஈரான் எல்லையில் அமைந்துள்ள சட்காஜென்டோர் குடியிருப்புகள்,
2. வடக்கில் ஷார்ட்டுகை(ஆப்கானிஸ்தான்)
3. கிழக்கில் ஆலம் புர்ஜிர் (உத்தரபிரதேசம்)
4. தெற்கில் தைமாபாத் (மஹாராஷ்டிரம்)
எனது சிந்து நாகரீகப்பகுதிகளின் எல்லைகளாக வரையறுக்கப்பட்டுள்ளன.
5. 1. ஹரப்பா பொருளாதாரத்தில் கைவினைத் தயாரிப்பு ஒரு முக்கியமான பகுதியாகும்.
2. மணிகள் மற்றும் அணிகலன் செய்தல், சங்கு வளையல் செய்தல், உலோக வேலைகள் ஆகியவை கைவினைச் செயல்பாடுகளாக இருந்தன.
3. கார்னிலியன்(மணி) ஜாஸ்பர், கிரிஸ்டல் (படிகக்கல்) ஸ்டீட்டைட் (நுரைக்கல்) ஆகியவற்றிலும்,
4. செம்பு, வெண்கலம், தங்கம் ஆகிய உலோகங்களிலும்
5. சங்கு, பீங்கான், சுடுமண் ஆகியவற்றிலும் அணிகலனைச் செய்தார்கள்.
6. இவைகள் எண்ணற்ற வடிவமைப்பிலும் வேலைப்பாடுகளுடன் செய்யப்பட்டன.
7. இவை மெசப்பட்டோமியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

அனைத்து வினாக்களுக்கும் விடையளி

6. 1. வரலாற்றின் முந்தைய காலத்தைப்பற்றி அறிந்து கொள்வதற்கு எழுத்து வடிவிலான சான்றுகள் இல்லை.
2. தொல்லியல் ஆய்வின் மூலம் கிடைத்துள்ள நிலவியல் அடுக்குகள், கற்கருவிகள், மட்பாண்டஓடுகள், எலும்புக்கருவிகள், உலோகக் கருவிகள், பாறை ஓவியங்கள், கைவினைப் பொருள்கள் போன்றவைகள் வரலாற்றுக்கு முந்தைய காலத்துக்கான ஆய்வுக்கு உதவும் சான்றுகள் ஆகும்.
7. வரலாற்றில் மிகவும் தொன்மையான காலம் பழங்கற்காலம் எனப்படுகிறது. இது மூன்றாகப் பிரிக்கப்படுகிறது. அவையாவன
1. கீழ்ப்பழங்கற்காலம் 2. இடைப்பழங்கற்காலம் 3. மேல் பழங்கற்காலம்
8.

ஹரப்பா நாகரீகம் பல்வேறு கட்டங்களாக பின்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளது.
1. தொடக்ககால ஹரப்பா பொ.ஆ.மு.3000-2600
2. முதிர்ச்சி அடைந்த ஹரப்பா பொ.ஆ.மு. 2600-1900
3. பிற்கால ஹரப்பா பொ.ஆ.மு. 1900-1700
ஒரு நகரப் பண்பாட்டிற்கான கூறுகள் முதிர்ச்சி பெற்ற ஹரப்பாவின் காலத்தில் இருந்தது.

9. 1. மொக்ஞ்சாதாரோவின் சிறப்புக்குரிய பொது இடம் முற்றத்துடன் கூடிய பெரிய குளியல் குளமாகும்.
2. குளத்தில் நான்கு பக்கங்களிலும் நடை பாதை மற்றும் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன.
3. உடைகள் மாற்றும் அறைகள், மற்றும் தண்ணீர் உள்ளே வர, கழிவுநீர் வெளியேற வடிகால் வசதி இருந்தது.
4. இக்குளம் சடங்குகளின்போது குளிப்பதற்கு வசதியாக அமைக்கப்பட்டிருக்கலாம்.

QB 365 TM Study Material
QUESTION BANK 365